திரு. கே. அன்பழகன் : தலைவர் அவர்களே, பொழுது போக்கு வசதிக்காக மட்டுமல்லாமல், போக்குவரத்துக் கழகங்களின் நல்ல பணிகள், மத்திய, மாநில அரசுகளின் திட்டங்கள், பல்வேறு இலாக்காக்கள் தயாரித்துள்ள துண்டுப் படங்கள் ஆகியவற்றை அந்த வீடியோ கேசட் பிளேயர் மூலமாக மக்களுக்குக் காட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதை அமைத்து, அது செயல்பாட்டிற்கு வருகிற போது முழுமையாக, மக்களுக்குப் பயன்படுகிற வகையில் வேண்டிய காட்சிகள் காட்டப்படும்.

திரு. சு. சிவராஜ் : தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே ஓடிக் கொண்டிருக்கிற ஆம்னி பஸ்களில்— நீண்ட தூரப் பஸ்களில்— இந்த வீடியோ வசதிகளை வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்குகின்ற நீண்ட தூர பேருந்துகளில் இது போன்ற வசதி இல்லாத காரணத்தால் பிரயாணம் செய்கிற மக்கள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை விட ஆம்னி பஸ்களில் பிரயாணம் செய்வதைத்தான் விரும்புகிறார்கள். ஆகவே நம்முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இந்த வீடியோ வசதிகளைச் செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தனியார் பஸ்கள் சிலவற்றில் அவர்கள் வைத்திருக்கிறார்கள். எல்லா பேருந்துகளிலும் இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. காரணமாக அவர்கள் ஒரே ஒரு பேருந்தை மட்டும் வைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால் அதை இயக்குவதற்கு, கவனிப்பதற்கு அவர்களுக்குச் சுலபமாக இருக்கிறது. ஆனால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே நிலைமை அப்படியில்லை. இதற்கு முன்னாலே நெடுந்தூரப் பேருந்துகள் சிலவற்றில் நாம் அந்த வசதியை வைத்திருந்தோம். அது அடிக்கடி இயங்காமல் போகிற சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது. அதை மனதில் கொண்டு, அதற்காக ஆகிற செலவினங்களை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தபோது பல கோடி ரூபாய் அளவிற்கு வருமென்ற காரணத்தால் இப்போது அது கைவிடப்பட்டிருக்கிறது.

கொட்டமுடி ஆற்றின் குறுக்கே பாலம்.

133—(*வினா எண் 14887) திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், போடிநாயக்கனூர் ஒன்றியம், பூதிப்புரம் அருகே கொட்டகுடி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1987 நவம்பர் 16]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நெடுஞ்சாலைகளில் அலங்கார வளைவுகள்

134—(*வினா எண் 14913) திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புறங்களில் நகர நெடுஞ்சாலைகளில் அலங்கார வளைவுகள் கட்டி போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் இச்செயலை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) இதனால் விபத்துக்கள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, (அ) இது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இப்போது இல்லை.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற நெடுஞ்சாலைகளில், அலங்கார வளைவுகளினால் கடந்த 3 ஆண்டுகளில் சாலை விபத்துக்கள் ஏதும் நிகழவில்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அலங்கார வளைவுகள் கட்டுவதன் காரணமாக அழகான சாலைகளில் பள்ளங்கள் ஏற்படுகின்றன. அந்தப் பள்ளங்களை தூர்க்காத காரணத்தால் இரவு நேரங்களில் மோட்டார் பைக், மொபட், சைக்கிள் போன்றவற்றில் வருபவர்களும், இன்னும் சில நேரங்களில் பேருந்துகள் கூட விபத்துக்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இது போன்ற தகவல் வரவில்லையென்று சொல்வது முற்றிலும் மாறானது என்றே எண்ணுகிறேன். இருந்தாலும் மேலும் விபத்துக்கள் இதனால் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். அதற்கு பொலிட்டிகல் டெசிஷன் என்று சொல்வார்களே, அதைப் போல எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் சேர்ந்து, இணைந்து ஒரு முடிவை எடுத்து அரசு அதனைத் தீர்மானமாக வடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் இந்த வளைவுகளினால் பல்வேறு விபத்துக்கள் ஏற்படுவதை நானே நேரடியாகக் கண்டிருக்கிறேன். அதைப் போல உரிமங்கள் பெறுவதைக்கூட பெறாமலே அரசியல் கட்சிகள் இவற்றை அமைத்து விடுகின்றன. இந்த நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.